<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 131/2010</u>

**2025**–ம் ஆண்டு ஜீலை மாதம் 11–ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி–8(PW–8)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | D.சுரேஷ் | தொழில் | : | காவல் கூடுதல் கண்காணிப்பாளர் |
| த/பெ. | : | என். துரைராஜ் | ஊர் | : | மயிலாடுதுறை |
| வயது | : | 54 | மாவட்டம் | : | மயிலாடுதுறை |

**<u>11.07.2025</u>**

**<u>1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 3வது எதிரி இறப்பு.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மயிலாடுதுறை மாவட்ட சைபர் கிரைம் பிரிவில் கூடுதல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 25.08.2008 ஆம் ஆண்டு திருவையாறு காவல் நிலைய காவல் நிலைய குற்ற எண்.213/2008, ச/பி. 197,198,466,468, இதச வின் கீழ், உதவி ஆய்வாளர் தேவதாஸ் என்பவரால் பதியப்பட்டு என் பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பை நான் தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். மேற்படி வழக்கின் முதல் கட்ட விசாரணை செய்த ஆய்வாளர்கள் ரவி, மற்றும் சிவக்குமார் ஆகியோருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

3. வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் ரவி புகார்தாரர் அவரிடம் ஒப்படைத்த ஆவணங்கள் பொறுத்த மெய் தன்மை அறிய வட்டாச்சியருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் வழக்கினை தொடர்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் சிவக்குமார் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட குற்ற என் .192/2008 சட்டப் பிரிவு 145 Crpc வழக்குப்பற்றி வருவாய் கோட்டாச்சியருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்,

4) வழக்கினை தொடர் விசாரணக்கு எடுத்துக்கொண்ட நான், 30.06.2009 ஆம் தேதி இவ்வழக்கின் சாட்சிகளான கோபலாகிருஷ்ணன் மற்றும் தங்கவேல் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.07.2009 ஆம் தேதி வழக்கு தொடர்பான ஆவணங்களை மகாலிங்கம், இளங்கோவன் ஆகிய சாட்சிகள் முன்னிலையில், புகார்தாரரிடம் இருந்து மகஜரில் கைப்பற்றினேன். மகஜர் சாட்சிகளையும் ஆய்வாளர் ரவி, மற்றும் சிவக்குமார் ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5) வழக்கின் எதிரிகள் முன்பிணை பெற்றுவிட்டார்கள் என தெரிந்துகொண்டு, இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 20.06.2010 ஆம் தேதி எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>2வது எதிரி  தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) குற்ற சம்பவம் 07.07.2008–ல் நடந்துள்ளது. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புகார்தாரரின் சகோதரர் பாகபிரிவினை கோரி திருச்சி மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.85/2008 வழக்கை 24.04.2008 ல் தாக்கல் செய்துள்ளார் என்றும் அதில் இந்த வழக்கு தொடர்பான சொத்தும் காட்டப்பட்டுள்ளது என்றும் அது குறித்து புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சிவில் வழக்கு தொடர்பாக நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு பற்றி தெரியவில்லை.

2) இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக, நீதிமன்றத்தில் குவிமுசா பிரிவு 156 ன் கீழ் உத்தரவு பெறுவதற்கு முன்பு காவல் நிலையத்தில் நேரடியாக புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. பொதுவாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அது மறுக்கப்பட்டால் தான் நீதிமன்றத்தில் குவிமுசா பிரிவு 156 ன் கீழ் உத்தரவு பெறப்படும் என்றால், சரியல்ல, சில நேரங்களில் நேரடியாகவும் உத்தரவு பெறுவார்கள். இந்த வழக்கு உரிமையியல் பிரட்சணை சம்மந்தமான குற்ற வழக்கு என்றால் சரிதான்.

3) 1, 2 எதிரிகள் புகார்தாரருக்கு எதிராக தவறான வருவாய் ஆவணங்கள் கொடுத்ததாகதான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்மந்தப்பட்ட வருவாய் ஆவணங்களின் அசலை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகைப்படம் நகல் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். திருவையாறு வட்டாச்சியரை விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் விசாரணை செய்தேன். வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் உண்மையானது என்று திருவையாறு வட்டாச்சியர் அலுவலகத்தில் இருந்து ந.கா.எண்.9227/2008 நாள் 22.06.2009 பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

4) வட்டாச்சியர் அலுவலகத்தில் இருந்து உரிய விபரங்கள் தெரிந்துக்கொள்ளாமல் எதிரிகளுக்கு எதிராக இந்த குற்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருவையாறு கிராம நிர்வாக அலுவலர் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 3 வது எதிரிதான் சாகுபடி செய்வதாக சான்று வழங்கியுள்ளார் என்றால் ஆமாம், அது பொய்யானது என்று தான் இந்த வழக்கு. ஒரு புல எண் ஒருவருக்கு சொந்தமானதாக இருந்தாலும் அந்த இடத்தை வேறுவொரு நபர் அனுபவ சாகுப்படி செய்தால் அனுபவ சான்று வழங்குவது சட்டரீதியானது என்றால் நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும்.

5) அனுபவ சான்று வழங்க VAO க்கு அதிகாரம் உள்ளது என்பதையும் வட்டாச்சியர் சான்று வழங்க பரிந்துரை செய்யலாம் என்பதையும் நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான். வட்டாச்சியருக்கு இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துறையில் இருந்து அனுப்பிய கடிதத்திற்கு ஓ.மு.12806/2008 அ.7 என்று 06.10.2008 தேதியில் கடிதம் அனுப்பபட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை, என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி கடிதம் என்றால் சரிதான். இந்த வழக்குகுரிய எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

6) இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களில் புல எண் அந்த கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரிகளின் பெயர்களும்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் 1416, 1417 பசிலி வருடத்தில் 3 வது எதிரிதான் சாகுபடி செய்து அனுபவம் செய்து வருவதாக தெரியவருகிறது என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் மாவட்ட அமர்வு நீதிமன்ற அரசு குற்றத்துறை வழக்கறிஞரிடம் கடந்த 18.08.2009 ஆம் தேதி கருத்துரை பெற்றுள்ளேன் என்றால் எனது கோப்பில் இல்லாததால் எனக்கு தெரியவில்லை.

7) என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் பெற்ற கருத்துரை தான் என்றால் ஆமாம். அதில் தற்சமயம் குற்றவழக்கு தொடரமுடியாதா என சொல்லப்பட்டுள்ளதா என்றால், (சாட்சி, எதிரி தரப்பில் அவரிடம் காண்பிக்கப்பட்ட 18.08.2009 தேதிய கருத்துரையை பார்த்துவிட்டு) சொல்லப்பட்டுள்ளது. மகஜரில் கைப்பற்றப்பட்டதாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அ.சா.1 காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் ஒப்படைத்தது என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் அனைத்தையும் படிவம் 91 ல் குறிப்பிட்டுள்ளேன். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நேரடியாக ஒப்படைக்கப்பட்டதால் சாட்சி கையொப்பம் பெறும் வழக்கம் இல்லை.

8) ஆவணங்களை சாட்சிகளின் முன்னிலையில் தான் மகஜரில் கைப்பற்றியுள்ளேன் என்றால் சரிதான். புல.எண்195/2A 1.58.5 ஏர்ஸ் நிலத்தை 1417 பசலியில் திருவையாறு, செம்பகபேட்டை தெருவை சேர்ந்த தற்போது திருச்சி, தில்லைநகரில் வசிக்கும் சந்திரகாசன் மூப்பநார் மகன் பழனிசாமி என்பவர் கொடிக்கால் சாகுபடி மூலம் அனுபவம் செய்தார் என்பதை 05.07.2008 ல் திருவையாரில் வசிக்கும் பொதுமக்கள். விவசாய தொழிலாளர்கள் என்னிடம் வாக்குமூலமாக கொடுத்தார்களா என்றால் இல்லை. 1, 2 வழங்கிய சான்றினை அ.சா.1 தான் என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான்.

9) கிராம நிர்வாக அலுவலர்களான 1, 2 எதிரிகளின் மேல் அதிகாரிகள் யாரையும் நான் இந்த வழக்கு தொடர்பாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தேன் வாக்குமூலம் மட்டும் பெறவில்லை. ஏன் பதிவு செய்யவில்லை என்றால் விசாரணை திருப்த்தி அடைந்ததால் அவசியப்படவில்லை. எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி இருந்தால், யார் மூலமாக எடுப்பேன் என்றால் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுப்பேன். எதிகள் அரசு ஊழியர்களாக உள்ள நிலையில் அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால், யார் மூலமாக எடுப்பேன் என்றால் அவருடைய மேல் அதிகாரிமூலம் எடுப்பேன்.

10) அவ்வாறு எதிரிகளின் மேல் அதிகாரிகளிடம் நான் அவ்வாறு வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கு ஆதரவாக 3 சிவில் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதற்காக 3ஆம் எதிரி சாகுப்படி செய்துவரும் நிலத்தை நேரடியாக அவரிடம் இருந்து கைப்பற்றபடமுடியுமா என்றால் சட்ட ரீதியாக தான் எடுக்கமுடியும். அ.சா.1க்கும் அவரது குடும்பத்தாருக்கும் இந்த வழக்கு நிலம் தொடர்பாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அ.சா.1 மட்டும் தனியாக கொடுத்த புகாரின் மீது நான் நடவடிக்கை எடுக்கமுடியாது என்றால் சரியல்ல. அ.சா. 1 அவரது குடும்பத்தாரை ஏமாற்றி இந்த சொத்தை அபகரிக்கவேண்டும் என்று கொடுத்த பொய்யான புகாரின் மீது நான் உரிய புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு

எதிராக வழக்கு பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

11) 1, 2 எதிரிகள் எவ்வித குற்றமும் செய்யவில்லை என்றும், முறையா விசாரணை செய்து சான்று வழங்கியுள்ளார்கள் என்றும் தங்களது பணியைதான் செய்துள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. தாசில்தாரை விசாரித்து கடிதம் பெற்று, அரசு வழக்கறிஞரால் குற்ற வழக்கு தாக்கல் செய்யமுடியாது என கருத்துரை பெற்றப்பிறகு நான் இந்த வழக்கை எதிரிகளுக்கு எதிராக வேண்மென்றே தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மறுவிசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஓம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.